1973 பிப்ரவரி 10]

into touch with the Central Government and asked for higher quota and whether the Government have succeeded in getting a higher quota so that the farmers can be satisfied?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நம்முடைய மாநிலத்திற்கு உரம் எவ்வளவு தேவையோ அதற்கான டிமாண்டை அனுப்புகிறோம். ஆனால் அவர்கள் நாம் கேட்ட அளவு கொடுப்பதில்லை. அப்படிக் கொடுப்பதிலும் தாமதம் காட்டுகிறார்கள். இந்த ஆண்டும் கூட நாம் கேட்டதில் 32 சதவிகிதம் தான் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் அதிகமாக வேண்டும் என்கிற கோரிக்கை நேற்றைய முன்தினம் நமது முதல்வர் அவர்கள் மத்திய அமைச்சர் திரு. ஷிண்டேயிடம் கூட வற்புறுத்தியிருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. ஹாண்டே அவர்களுடைய கேள்விக்கு ஒரு விளக்கம் அறிவிக்க விரும்புகிறேன். நேற்றைக்கு முன்தினம் மத்திய அமைச்சர் திரு. ஷிண்டே அவர்கள் என்னையும், உணவு அமைச்சர் அவர்களையும், கூட்டுறவு அமைச்சர் அவர்களையும் சந்தித்தார். நாங்கள் அவருடன் நீண்ட நேரம் இந்த உரம்பற்றி விவாதித்திருக்கிறோம். அவர்கள் தமிழ்நாட்டில் இருந்து கேரளா போன்ற மாநிலங்களுக்குத் தருவதற்காக அரிசி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கும் நாம் ஓரளவு ஒப்புதல் அளித்திருக்கிறோம். ஒரு லட்சம் டன் அரிசி வேண்டுமென்று மத்திய அரசின் சார்பில்—அதுவும் முக்கியமாக கேரளாவுக்கு அனுப்புவதற்காக என்று கேட்டபோது இந்த ஒரு லட்சம் டன் அரிசியைத் தர ஒத்துக்கொண்டிருக்கிறோம். அதேநேரத்தில் இப்போது இந்தியாவில் பரவலாக பல்வேறு பகுதிகளில் உணவுப் பற்றுக்குறை நிலை ஏற்பட்டிருக்கிறபோது ஓரளவு தமிழ்நாடு தன்னிறைவு பெற்றிருப்பதாலும், மற்றப் பகுதிகளின் குறையைப் போக்க இன்னும் அதிக அளவில் உணவு உற்பத்தியில் தொடர்ந்து கவனம் செலுத்த நமக்கு அதிகமான அளவு உரம் அளிக்கவேண்டுமென்றும் வலியுறுத்திக் கூறியிருக்கிறோம். அதைத் தீவிரமாகக் கவனித்து ஆவன செய்வதாக உறுதி அளித்துச் சென்றிருக்கிறார்கள். அதன் விளைவாக ஆக்கப் பணிகள் நடைபெறும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

சர்க்கரை வழங்கல்

*** 117 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சர்க்கரை தட்டுப்பாடு ஏற்பட்டதற்குக் காரணம் என்ன ?

(இ) இதைப்போக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?